நாள்.02.02.2026
அசல் வழக்கு எண். 145/2023
வா. சா.1
பெயர். பத்மநாபன்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு சொந்த ஊர் திருநெல்வேலி ஆகும். நான் தற்போதும் திருநெல்வேலியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 04.08.2021 ல் ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் வழி தான் தபசில் சொத்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்பு தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

தாவா சொத்து திருக்குறுங்குடி ஜீயர் மடத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் குத்தகை பெறும் பொழுது தாவா சொத்தை யார் காட்டினார்கள் என்றால் மடத்தை சார்ந்த நபர்கள் தான் எனக்கு காட்டினார்கள். பொதுவாக, மடத்து இடத்தை காட்டமாட்டார்கள் என்றாலும், யார் இடத்தை காட்டினார்கள் என்றால் முத்து செல்வி என்பவர் இடத்தை காட்டினார். முத்து செல்வி என்பவர் மடத்து இடத்தை நான் குத்தகைக்கு பெற்றுள்ளேன் என்றும் தற்போது மடத்திடம் பேசி எனக்கு குத்தகைக்கு தர சொல்லுவதாக என்னிடம் சொல்லி இடத்தை காட்டினார் என்றால் சரிதான்.

என்னுடைய பிராதில் பத்தி 3 ல் 5 வது வரியில் 25.02.2013 ல் 1ம் பிரதிவாதி மடத்தின் பவர் ஏஜெண்ட் பிராது தபசில் நிலம் பயிர் எதுவும் செய்ய லாயக்கற்ற நிலமாகவும் வறட்சியான பூமியாக இருப்பதாலும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 ல் எனக்கும் தபசில் சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தம் 04.08.2021 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பிராதில் பாரா 4 ல் 4 ம் வரியில் குத்தகை ஒப்பந்த காலம் 01.07.2021 முதல் 30.06.2026 வரை உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

என்னுடைய பிராது படி 04.08.2021 ல் குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும் ஒப்பந்த காலம் 01.07.2021 முதல் 30.06.2026 என குறிப்பிடப்பட்டுள்ளதால் என்னிடம் அனுபவம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல, ஒரு மாதகாலத்திற்கு முன்பே என்னிடம் அனுபவம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1,2 ஆவணங்களில் 04.08.2021 ம் தேதி என்று தான் கையால் எழுதப்பட்டது

என்றால் சரிதான். தபசில் சொத்தில் கம்பு பயிர் செய்து வருவதாக என்னுடைய பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இடத்தில் கம்பு பயிர் செய்வதை காட்டும் வகையில் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மடத்து இடம் என்பதால் மேற்படி ஆவணங்கள் என் கைவசம் இல்லை.

கம்பு பயிர்களை விற்பனை செய்வததற்கான ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். 04.08.2021 காலகட்டத்திலிருந்து கம்பு பயிர் செய்து வருகிறேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதியான வேல்முருகன் எப்பொழுதில் இருந்து தபசில் சொத்தில் என்னுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருகிறார் என்றால் டிசம்பர் 2021 ம் ஆண்டிலிருந்தே இடைஞ்சல் செய்து வருகிறார். மேற்படி காலத்தில் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2021 ம் ஆண்டில் புகார் அளித்ததற்கான ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

24.04.2023 ல் 1 ம் பிரதிவாதி எனக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 ஆவணம் மேற்படி அறிவிப்பு என்றால் சரிதான். அதில் 1 ம் பாராவில் 16 வது வரியில் தபசில் சொத்தினை தரிசாக போடக்கூடாது என நிபந்தனை 7 ன் படி கூறப்பட்டுள்ளது, ஆனால் நான் 2021 முதல் 2023 வரை தபசில் சொத்தில் விவசாயம் செய்யாமல் இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது பொய்யாக கூறப்பட்டுள்ளது. அதே போல் 21 வது வரியில் எனக்கும் 2 ம் பிரதிவாதிக்கும் தபசில் சொத்து சம்மந்தமாக அடிக்கடி பிரச்சனை ஏற்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ 4 ல் 2 ம் பக்கத்தில் 3 வது வரியில் நான் அடவோலை நிபந்தனைகளுக்கு எதிராக செயல்பட்டு வருவதால் 04.08.2021 ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்யப்படுகிறது என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் 10 வது வரியில் சட்டப்பிரிவு 34 பி (3) ன் கீழ் குத்தகை ஒப்பந்த ரத்து அறிவிப்பு வழங்கப்பட்ட பின்பு தபசில் சொத்து ஜீயர் மடம் அனுபவத்தின் கீழ் வந்து விட்டதாக கருதப்படும் என கூறப்பட்டுள்ளது என்றால் தபசில் சொத்தின் அனுபவம் என் வசம் தான் உள்ளது.

நான் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ 5 ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6 ஆவணம் தான் நான் மடத்திடம் ஏற்படுத்திய குத்தகை ஒப்பந்தம் என்றால் சரிதான். அதில் 7 வது நிபந்தனை தபசில் நிலத்தினை எக்காரணம் கொண்டு தரிசாக போடக்கூடாது என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 ல் இருந்து

என்னுடைய முன் குத்தகைதாரர் தபசில் சொத்தில் எவ்வித பயிறும் செய்யவில்லை என்றாலும் 2021 ல் நான் குத்தகைக்கு பெற்றதில் இருந்து நானும் பயிர் எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, நான் பயிர் செய்து தான் வருகிறேன்.

முத்துசெல்வியின் தகப்பனார் வேலு வை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர் 2 ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்த வழக்கை பற்றி தெரியுமா என்றால் தெரியாது, இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரியும். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை பற்றி என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. எதிர்வழக்குரையில் 3 வது பத்தியில் வாதி வழக்கில் கூறியுள்ள சொத்து சர்வே எண் 11 ல் உள்ள ஹரிஜன் காலணிக்கு பாத்தியப்பட்டு மேற்படி மக்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது.

இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 44/2013 வழக்கு நடந்தது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவரது அறிக்கையில் சர்வே எண் 12/1 விவசாயம் செய்வதற்கு லாயக்கற்ற நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனைக்கு இந்து சமய அறநிலைத்துறையில் தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியும்.

வழக்கு தாக்கல் செய்த பிறகு இந்து சமய அறநிலையத்துறையில் மனுக்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு தாக்கல் செய்தததால் இந்த வழக்கு இல்லாநிலையதாக கருதப்பட வேண்டும் என்றால் சரியல்ல, ஏற்கனவே 2 ம் பிரதிவாதி எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி வழக்கு குறித்து பிராதில் நான் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு தொடர்பான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கில் நான் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை.

என்னுடைய பிராதில் 1 ம் பரிகாரத்தில் 1ம் பிரதிவாதியும் அவரது வகையாட்களும் சட்ட முறையின்றி என்னை தபசில் சொத்தில் இருந்து வெளியேற்ற கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிராதில் 6 வது பாராவில் கடைசியில் இருந்து 4 ம் வரியில்

2ம் பிரதிவாதி எவ்விதமான அடிப்படையும் இல்லாமல் வாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்படுவதால், 1ம் பிரதிவாதியின் கைப்பாவையாக செயல்பட்டு வருவதால் இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதி கட்சி சேர்க்கப்பட்டுள்ளதால் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் தபசில் சொத்து ஒருநாளும் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றாலும் திருவரங்கநேரி ஹரிஜன் காலணி மக்கள் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. மேலும், என்னுடைய முன் குத்தகைதாரர் வேலு மற்றும் அவருடைய மகள் முத்துசெல்வி அவர்கள் மீது ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. உண்மையான நில சுவானதாரர்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்பதால் வழக்கு தள்ளுப்படிக்குரியது என்றால் சரியல்ல.

04.08.2021 ம் தேதியில் ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தம் 24.04.2023 ம் தேதியிட்ட அறிவிப்பின் படி குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாலும் தபசில் சொத்தில் அனுபவம் 1ம் பிரதிவாதி வசம் வந்து விட்டதாலும் நான் ஆக்கிரமிப்பாளர் என்ற முறையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய சட்ட அனுமதி கிடையாது என்றாலும் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.